**வெலிகம பிரதேச சபை - 2023**
**--------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வெலிகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 418,443 தொகையும் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 46,666,669 தொகை மற்றும் டேலர் ஒன்றின் பெறுமதி ரூபா 600,000 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செலுத்த வேண்டிய நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோரின் கூட்டுத்தொகை ரூபா 149,365 தொகை மிகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், செலுத்த வேண்டிய பலவின செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 950,744 தொகைக்காக ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | செலுத்தி முடிந்திருந்த மற்றும் மிகையாக அறவிடப்பட்டிருந்த ஊழியர் கடன் ரூபா 182,266 தொகை பெற வேண்டிய ஊழியர் கடன் எனவும் தீர்க்கப்பட்டிருந்த ரூபா 266,247 இற்கான நிர்மாண வேலை முற்பண மீதி ஒன்று பெற வேண்டியவை எனவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதற்குரிய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 493,416 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | இணங்குகின்றேன் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 12,093,509 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிகள் | | | |
| | விதி 211 | சூரிய பெனல் உடனான பேரொளி விளக்கு பொருத்துவதற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 375,800 தொகை பெறுமதியான 23 ஜீ.ஐ. குழாய்கள் இருப்புப் பதிவேட்டில் உட்படுத்தி இருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 132(ஓ) (1987 இன் 12 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச் சட்டத்தின் தொடர்ச்சியான ஏற்பாட்டுச் சட்டத்தின் 2(1)(அ) | சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த குறைந்த வருமானமுடைய நபர்களுக்கு வீடமைப்பு உதவி ரூபா 10,060,000 தொகையும் சிப்தொர நிகழ்வுநிலை கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 744,653 தொகையும் மேற்குறிப்பிட்ட பிரமாணங்களுக்கு இணங்க எழுத்துமூல பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும் |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி. 104(4) | 2019 செப்தெம்பர் 27 ஆந் திகதி இலக்கம் ZA-4971 கொண்ட வாகனம் விபத்துக்குள்ளாதல் தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (ii) நி.பி. 272(1)(2) | 2021 மற்றும் கடந்த ஆண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 937,248 தொகை பெறுமதியான 11 உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) நி.பி. 1642 | சபைக்குச் சொந்தமான 5 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் விபத்துக்கு உள்ளாகியது தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினால் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 79,998,357 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 89,001,946 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 34,310,300 | 30,792,291 | 29,586,156 | 32,205,862 | 31,735,300 | 22,693,922 | 16,944,134 | 30,999,727 |
| ii. | வாடகை | 4,480,000 | 3,760,982 | 3,229,068 | 2,241,836 | 6,370,000 | 2,896,359 | 3,483,791 | 1,709,922 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 12,110,500 | 9,982,600 | 9,749,685 | 1,109,106 | 11,960,100 | 2,570,341 | 1,891,059 | 876,191 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 34,177,100 | 19,123,762 | 19,687,111 | 3,589,354 | 30,918,100 | 135,864,078 | 136,205,521 | 4,152,703 |
| | மொத்தம் | 85,077,900 | 63,659,635 | 62,252,020 | 39,146,158 | 80,983,500 | 164,024,700 | 158,524,505 | 37,738,543 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 30,046,506 தொகையாகக் காணப்பட்டதுடன், 22848 அலகுகள் | இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான சிட்டையிடல் ரூபா 21,510,965 தொகையுடன் ரூபா 51,557,471 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 19,494,673 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 32,062,798 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | | |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான வாடகை செலுத்தப்படும் 57 கடையறைகள் காணப்பட்டதுடன் அவற்றில் 37 இல் இருந்து ரூபா 1,315,331 இற்கான நிலுவை வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அதில் 04 கடைகளுக்கான ரூபா 100,000 இனை விட மிகைத்துள்ள நிலுவை ஒன்றும் காணப்பட்டது. | இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு அனுமதிப் பத்திரக் கட்டண நிலுவை ரூபா 876,191 தொகையாகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 9,982,600 தொகையுடன் ரூபா 10,858,791 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 9,749,685 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,109,106 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது. | 2024 ஏப்ரல் 30 திகதியளவில் நிலுவைத் தொகையில் ரூபா 932,656 தொகை அறவீடு செய்யப்பட்டது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் நிதிமன்றத் தண்டப்பணம் என ரூபா 5,366,648 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் என ரூபா 141,606,267 தொகை பெற வேண்டியிருந்தது. | இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆண்டின் போது பிரதேச சபை அலுவலக வளவில் இரவுபகல் கரப்பந்தாட்ட விளையாட்டுத் திடல் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் தரையை செப்பனிடுவதற்காக ரூபா 1,049,844 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்ததுடன் இந்த நிர்மாண வேலை இடை நடுவில் கைவிடப்பட்டு நிலத்தின் கீழ் மேற்கொண்டிருந்த நிர்மாண வேலைகளுக்கு அண்மையில் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்றின்றி கம்பனி ஒன்றினால் தொலைபேசி செலுத்துகை கோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | மிரிஸ்ஸ கிராமிய வைத்தியாலை அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியில் விளையாட்டுத் திடல் ஒன்று நிர்மாணிப்பதற்காக முறைசாரா விதமாக ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்து ரூபா 396,049 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், முழு வளவும் அடர்ந்த காடுகள் ஒன்றாக காணப்பட்டது என வெளிக்கள கணக்காய்வுப் பரிசோதனையின் போது காணக்கூடியதாக இருந்தது. | இணங்குகின்றேன் என. | சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் ஆக்கபூர்வமான பயன்படுத்த வேண்டும். |

### 3.3 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுமக்கள் சேவை நிகழ்வு நிலையின் ஊடாக வழங்குவதற்கு இணையத் தளம் ஒன்று அமைப்பதற்காக முறைசாரா விதமாக தெரிவு செய்யப்பட்டிருந்த நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 162,500 இற்கான முற்பணத் தொகையொன்று செலுத்தியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 07 திகதியளவிலும் இணையதளம் நிர்மாணித்திருக்காததுடன் முறைசாரா கொடுப்பனவு தொடர்பாக விசாரணை அலுவல்களும் இதுவரை பூர்த்தியடைந்திருக்கவில்லை. | விசாரணை அலுவல்கள் முடிவடைந்துள்ளது எனவும் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது விபத்துக்குள்ளாகியிருந்த PF-7423 இலக்கங் கொண்ட கப் வண்டி தொடர்பாக நி.பி. 104 இற்கு இணங்க விசாரணை மேற்கொண்டு நட்டத்தை மீளளிப்பு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 104(4) விசாரணை மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**34 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 முதல் மீளாய்வாண்டு ஏப்ரல் 30 திகதி வரையான காலப்பகுதியில் மூன்று செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது பல்வேறு கருமங்களுக்காக ரூபா 4,008,721 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த மற்றும் பல்வேறு சேவைகள் பெற்றுக்கொள்ளும் போது விவரக் குறிப்புக்கள் தயாரித்திருக்காமை, மொத்த கிரய மதிப்பீடு தயாரித்திருக்காமை, முறையான பெறுகை செய்முறை கடைபிடிக்கப்படாமை, பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கும் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக பெற்றுக் கொள்ளவேண்டிய சான்றிதழ்கள் பெற்றுக் கொண்டிக்காமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டது. | எதிர்காலத்தில் மேற்கொள்ளும் பெறுகை அலுவல்கள் சரியாக மேற்கொள்ளப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டு கழிவுநீர் தொட்டிகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று நிர்மாணிப்பதற்காக போலியான உரிமையாளர் பெயரில் ரூபா 16,800,000 இற்கான காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக சட்டவரைஞர் மற்றும் முத்திரைக் கட்டணம் என ரூபா 785,100 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்கான காணி போதியளவான காணப்படாமையால் எதுவித தேவைக்கு பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | காணப்படும் தரைப் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக தொழிநுட்ப ரீதியாக பொருத்தமானது என தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் உறுதிப்படுத்தப்பட்டது என. | சபையின் ஆதனங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தல்அரம்ப எனும் இடத்தில் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்றின்றி 69.76 சதுரமீற்றர் இற்கான நீச்சல் தடாகம் மற்றும் 57.62 மீற்றருக்கான எல்லையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்திக் கட்டளைகள்/ பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜுலை 08 திகதிய 2335/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க ரூபா 98,570 இற்கான கட்டணம் அறவீடு செய்து முறைப்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 154(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஏல விற்பனை செய்யப்பட்ட 49 காணிகளிலிருந்து பெறுமதி மதிப்பீட்டு விற்பனை விலையின் மீது 1 சதவீதக் கட்டணமாக ரூபா 25,114,874 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறுமதி மதிப்பீடு மற்றும் உண்மையான விற்பனை பெறுமதியிடையே வித்தியாசத்தின் மீது அறவிடப்பட வேண்டிய 1 சதவீதக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வித்தியாசத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான வரகாபிடிய தகனகூடத்திற்கான வாகனத் தரிப்பிடம் அமைந்துள்ள காணி அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் படி சபைக்கு உரித்தாக்குவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போது, பிழையான தகவல்கள் சமர்ப்பித்து பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொண்டு மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு ரூபா 4,000,000 தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | சாட்டுதல் கட்டளை கிடைத்திருக்கவில்லை என. | அங்கீகாரத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2013 ஆண்டின் போது பொது அலுவல்களுக்காக சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த 1 ஏக்கர் 1ரூட் | காணியின் நில அளவை அலுவல்கள் இதுவரை | கிரயம் குறைவாக இருக்கக் கூடியவாறு |

| | | | |
|---|---|---|---|
| | 2.80 பர்சஸ் இற்கான களுவரபெத்த என்ற காணி, முன்னைய தலைவரின் உறவு முறையொன்று காணப்படும் மற்றும் அவரினால் 2012 திசெம்பர் 01 திகதி முதல் 2013 நவம்பர் 30 திகதி வரையான காலப் பகுதிக்காக குத்தகைக்கு எடுத்திருந்த கம்புறுகமுவ மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கரான்டுவ கடலான 1 ஏக்கர் 2 ரூட் தனியார் காணி ஒன்றிற்கு பரிமாற்றம் செய்திருந்ததுடன் அவ்வாறு பரிமாற்றம் செய்யப்பட்ட களுவரபெத்த காணி துண்டுகளாக பகிர்வதற்காக போலியாக அங்கீகாரம் வழங்கி மீண்டும் அந்தக் காணியின் இலக்கம் 4 மற்றும் 5 பகுதிகள் பொது வேலைகளுக்காக ரூபா 3,850,000 இற்கான தொகை செலவிடப்பட்டு சபைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படவில்லை என. | காணி கொள்வனவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு மார்ச் 19 திகதி சபை அங்கத்தவர்களின் பதவிகாலம் முடிவடைந்திருந்த போதிலும் 40 அங்கத்தவர்களுக்கு மீளாய்வாண்டின் போது மார்ச் மாதத்திற்குரிய மொத்த அங்கத்துவர் கொடுப்பனவும் ரூபா 600,150 தொகை செலுத்தப்பட்டிருந்தமையால் மிகையாக செலுத்திய தொகை ரூபா 238,065 காணப்பட்டதுடன் அவ்வாறு மிகையாக செலுத்திய தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகைத் தொகையினை அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | கொடுப்பனவு மேற்கொள்ளும் போது சரியாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | கடந்த ஆண்டின் போது சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த பொல்வத்த, கெதரவத்த பாதை அபிவிருத்திக்குரிய பில்பத்திரம் தொழிநுட்ப உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்படாமல் நிதிப் பிரமாணம் 237(அ)(1) ஏற்பாடுகளுக்கு புறம்பாக ரூபா 977,877 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிகள் மற்றும் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக ரூபா | பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்த | விதிகள் மற்றும் பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,800,000 தொகைக்கு கடந்த ஆண்டு கொள்வனவு செய்திருந்த பவுசர் தொட்டி ஒழுகுவதனால் அந்த நிறுவனத்திலிருந்தே ரூபா 3,200,000 இற்கான தொகைக்கு பயன்படுத்தப்பட்ட வேறொரு பவுசர்தொட்டி கொள்வனவு செய்யப்பட்டு இதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த தொட்டிக்காக செலுத்தப்பட்டிருந்த மற்றும் வர்ணம் தீட்டுவதற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 2,069,500 தொகையினை கழித்து ரூபா 1,130,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த பவுசர் தொட்டியில் எரிபொருள் நிரப்புவதற்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் பெற்றிருக்காததுடன் சந்தையில் காணப்படும் விலைகளின் படி எரிபொருள் Original எரிபொருள் பவுசர்தொட்டி ஒன்று போக்குவரத்து செலவு உட்பட ரூபா 2,270,855 தொகைக்கு கொள்வனவு செய்வதற்கு இயலுமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. | கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது என. | |
| (ஊ) | கடந்த ஆண்டின் போது கம்புறுகமுவ குப்பை செயற்திட்டத்திற்கு அண்மையில் அமைந்துள்ள நிலஅளவைப்பட இலக்கம் 35/215 காணியில் இருந்து 100 பர்சஸ்கள் சபைக்கு கொள்வனவு செய்யும் போது விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு போலியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டு காணியின் பெறுமதி ரூபா 9,400,000 இற்காக பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கொள்வனவு செய்வதற்கு முன்னர் முன்னைய தலைவரின் பெயரில் காணப்பட்ட மேற்கூறிய காணி தமது மகளின் கணவனுக்கு விற்பனை செய்து அவரிடம் ரூபா 9,400,000 தொகைக்கு காணியை சபைக்கு கொள்வனவு செய்திருந்தது. கடந்த மற்றும் மீளாய்வாண்டுகளில் காணியை கொள்வனவு செய்வதற்காக முத்திரைக் கட்டணம் மற்றும் சட்டவரைஞர் கட்டணமாக ரூபா 424,000 தொகை சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த காணியின் நில அளவை அலுவல்கள் ஆரம்பிக்கவுள்ளது எனவும் எல்லைகள் வேலிகள் போடப்பட்டு சேதனப் பசளை செயற்களத்தின் அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | கிரயம் குறையக் கூடியவாறு காணிகள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | குறைபாடுகளுடனான மற்றும் அங்கீகரிக்கப்படாத 58 கட்டிட நிர்மாண வேலைக்குரிய அபிவிருத்தி அனுமதிப்பத்திர கோப்புக்கள் மற்றும் 134 காணி துணைப் பகிர்வுக்குரிய கோப்புக்கள் முன்னைய தலைவர் ஒருவரினால் தொடர்நடவடிக்கை தவிர்ப்பதற்காக தனது உத்தியோகபூர்வ அறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் கோப்புக்களில் அடங்கிய கட்டிட வரைபின் 3 பிரதிகளில் 1 இனை கோப்பிலிருந்து அகற்றப்பட்டு போலியான சீல் பயன்படுத்தி கட்டிட வரைபுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான செய்முறை ஒன்றை கடைபிடித்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | சுபையினால் திட்டக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத மற்றும் குறைபாடுகள் காரணமாக திட்டக் குழுவினால் அங்கீகரித்திருக்காத 3 காணி துணைப் பகிர்வுகள் மற்றும் 3 துண்டு வரைபுகள் பிரதேச சபையின் முன்னைய தலைவர் ஒருவரினால் திட்டக் குழு தீர்மானங்கள் அடங்கியுள்ள வரைபுகளை அங்கீகரிக்கும் உத்தியோகபூர்வ முத்திரைக்கு பதிலாக போலியான முத்திரை ஒன்றினை பயன்படுத்தி போலியான திட்டக் குழு தீர்மானங்கள் உட்படுத்தப்பட்டு பிழையான முறையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான செய்முறை ஒன்றை கடைபிடித்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | பிரதேச மற்றும் நகர்சார் அதிகாரப் பிரதேசங்கள் பல்வேறு காரணங்களினால் திட்டக் குழுவினால் கட்டிட வரைபுகள் அங்கீகரிப்பதை நிராகரிக்கப்பட்டிருந்த 5 கட்டிட வரைபுகள் முன்னைய தலைவர் ஒருவரினால் திட்டக்குழு தீர்மான இலக்கமின்றி போலி முத்திரையை பயன்படுத்தி அங்கீகரித்திருந்தது எனவும் வெளிக்கள தெரிவு கணக்காய்வு வெளிக்களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான செய்முறை ஒன்றை கடைபிடித்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.4(i) ஏற்பாடுகளுக்கு புறம்பாக 2021 ஆண்டு முதல் 2023 ஆகஸ்ட் வரையான காலப் பகுதியில் 14 பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு ரூபா 63,931,823 இற்கான உடன்பட்டிருந்த பெறுமதிக்கு சாட்டப்பட்டிருந்த 37 ஒப்பந்த வேலைகள் பாதுகாப்புமுறிகள் பெற்றுக் கொள்ளாமல் ஒப்பந்த வேலை பெறுமதியில் 20 சதவீத முற்பணம் என ரூபா 13,173,881 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.7 ஒப்பந்த வேலை நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மிரிஸ்ஸ கிராமிய வைத்தியசாலை அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியில் விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கும் போது மத்திய அளவான மண் சமப்படுத்தி அடர்த்தியாக்குவதற்குரிய ரேட் பயன்படுத்தாமையால் ரூபா 26,884 தொகையும் தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின் படி அடுக்கப்பட்ட மண்ணின் அளவு 143.7 கனமீற்றர் காணப்பட்ட போதிலும் 204.75 கனமீற்றர்களுக்காக கொடுப்பனவு செய்த காரணத்தினால் ரூபா 82,417 தொகையாக ரூபா 109,301 இற்கான தொகையொன்று ஒப்பந்தகாரருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குடிநீர் வழங்கள் காணப்படாத 09 பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்கள் வழங்குவதற்காக வடிகால் வெட்டுவதற்காக JCB இயந்திரம் ஒன்றிற்கான வாடகை என ரூபா 891,318 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட ரேட்கள் பயன்படுத்தப்படாமையால் கனமீற்றர் ஒன்றிற்கு ரூபா 375.55 வீதம் 824.67 கனமீற்றர்களுக்காக ரூபா 309,705 தொகை ஒப்பந்தக்காரருக்கு மிகையாகச் செலுத்தியிருந்தது. | சரியான ரேட் பயன்படுத்தப்பட்டுள்ளது என. | சரியான ரேட் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 ஆண்டின் சபை நிதியத்தின் ஏற்பாடுகளின் மூலம் வரகபிடிய தல்கஹஹேன துணைப் பாதையின் பக்கச்சுவர் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,104.515 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், 06 ஆம் இலக்க வேலைவிடயத்தின் கீழ் பக்கச்சுவருக்கு 12 Guard Stone நிர்மாணிப்பதற்காக ரூபா 53,508 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2023 ஒப்தோபர் 27 ஆந் திகதி வெளிக்கள பரிசோதனையின் போது Guard Stone நிர்மாணித்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளின் படி கொடுப்பனவு செய்ய வேண்டும். |
| (ஈ) | ஜனஹித பேக்கரிக்கு அண்மையில் குதகல்ஹேன பாதையை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,632,965 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், பாதையின் மேற்பகுதி சமப்படுத்தி இருக்காத போதிலும் ரூபா 41,485 தொகையும், ABC உரிய முறையில் பரப்புதல் மேற்கொண்டிருக்காத போதிலும் ரூபா 25,448 தொகையும், உரிய கன அளவில் (Curb) பாதையோரம் கொங்கிரீட் பண்ணாமையால் ரூபா 23,902 தொகையுமாக ரூபா 90,835 இற்கான தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | தடுத்து வைத்தல் பணத்தில் இருந்து கழித்து கொடுப்பனவு செய்தல் மேற்கொள்ளப்படும் என. | நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளின் படி கொடுப்பனவு செய்ய வேண்டும். |
| (உ) | தெனிபிட்டிய கிழக்கு புத்தர் திருவறை அருகில் இருந்து பாதை மற்றும் பக்கச்சுவர் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 12,074,906 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் பக்கச்சுவர் மற்றும் ஓரங்களுடன் தொடர்புபடுத்தி பாதை ஓரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இடங்களில் வடிவமைப்புக்கள் தயாரிப்பதற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 11,526 தொகையும், உரிய கனத்தில் பாதையோரம் (Curb) தயாரிக்கப்படாத காரணத்தினால் ரூபா 28,680 தொகையுமாக ரூபா 40,206 இற்கான தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு மிகையாக செலுத்தியிருந்தது. | தடுத்து வைத்தல் பணத்திலிருந்து கழித்து கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் என. | நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளின் படி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கடந்த ஆண்டின் சபை நிதிய ஏற்பாடுகள் மீது இப்பாவல கஹபிலியதுவ பாதையை அபிவிருத்தி செய்யும் போது வேலை விடய இலக்கம் 4 இன் கீழ் ABC பரப்பி தகர்த்தலுக்காக ரூபா 54,156 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், தெரிவு வெளிக்கள கணக்காய்வு பரிசோதனையின் போது ABC இற்கு பதிலாக கற்துகில் பரப்பப்பட்டிருந்தது. அதன்படி ஒப்பந்தக்காரருக்கு மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக ரூபா 54,156 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தடுத்து வைத்தல் பணத்தில் இருந்து கழித்து கொடுப்பனவு செய்தல் மேற்கொள்ளப்படும் என. | நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளின் படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.8 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியளவில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள, ஓய்வுபெற்றுள்ள மற்றும் இறந்த 17 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,335,806 இற்கான கடன்மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அறவீடு செய்யப்படாமல் காணப்படும் கடன்மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |